# ஞானிகளின் முப்பது வாசகங்கள்

***1. கர்த்தரிடத்தில் நம்பிகையாயிறு*** ***நாள் 1***

***<u>நீதிமொழிகள் 22:17-19</u>***
*17. உன் செவியைச் சாய்த்து, ஞானிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு, என் போதகத்தை உன் இருதயத்தில் வை. 18. அவைகளை உன் உள்ளத்தில் காத்து, அவைகளை உன் உதடுகளில் நிலைத்திருக்கப்பண்ணும்போது, அது இன்பமாயிருக்கும். 19. உன் நம்பிக்கை **கர்த்தர்**மேல் இருக்கும்படி, இன்றையதினம் அவைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன்.*

*உண்மையான ஞானம் நம்மைக் தேவனோடு அதிகம் சார்ந்திருக்கச் செய்கிறது, குறைவாகயில்லை. தேவனை சரியான நோக்கில் பார்ப்பதில் ஞானத்தின் தேடல் தொடங்குகிறது என்பதை உணர்வதில் நாம் நம்முடைய நம்பிக்கையில் வளர்கிறோம்.*

***நீதிமொழிகள் 16:20 கர்த்தரை** நம்புகிறவன் பாக்கியவான்.*
***நீதிமொழிகள் 28:25 கர்த்தரை** நம்புகிறவனோ செழிப்பான்.*
***நீதிமொழிகள் 29:25 கர்த்தரை** நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்.*
***சங்கீதம் 62:8** எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.*

***<u>செயல்முறை:</u>***
*அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள் என்பதன் அர்த்தம் என்ன? இன்றே உங்கள் இருதயத்தை ஊற்றுங்கள்.*

***2. ஏழையைக் கொள்ளையிடாதே*** ***நாள் 2***

***<u>நீதிமொழிகள் 22:22-23</u>***
*22. ஏழையாயிருக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே; சிறுமையானவனை நியாயஸ்தலத்தில் உபத்திரவப்படுத்தாதே. 23. கர்த்தர் அவர்களுக்காக வழக்காடி, அவர்களைக் கொள்ளையிடுகிறவர்களுடைய பிராணனைக் கொள்ளையிடுவார்.*

*உபாகமம் 15:7. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் எந்த வாசலிலும் உன் சகோதரரில் எளியவனான ஒருவன் இருந்தால், எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும்,*

*சில சமயங்களில் ஏழைகளுக்கு (எளியவர்) பெரிய வளங்கள் இல்லையென்றும் அல்லது தங்களைத் தற்காத்துக் கொள்ள செல்வாக்கும் இல்லை என்றும் மக்கள் நினைக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்காக வழக்காடி அவர்களைப் பாதுகாப்பார் என்று வேதம் கூறுகிறது.*

*நீதிமொழிகள் 19:17. ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.*

***<u>செயல்முறை:</u>***
*ஏழைகளை இன்று நினைத்து அவர்களுக்கு உதவி செய்யுங்கள்*

***3. நீங்கள் யாருடன் பழகுகிறீர்கள் என்று கவனமாயிருங்கள்*** ***நாள் 3***

***<u>நீதிமொழிகள் 22:24-25</u>***
*24. கோபக்காரனுக்குத் தோழனாகாதே; உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே. 25. அப்படிச் செய்தால், நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிப்பாய்.*

*நீதிமொழிகள் 29:11*
*மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்; ஞானியோ அதைப் பின்னுக்கு அடக்கிவைக்கிறான்.*

*நீதிமொழிகள் 29: 22*
*கோபக்காரன் வழக்கைக் கொளுவுகிறான்; மூர்க்கன் பெரும்பாதகன்.*

*நீங்கள் அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உங்கள் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிக்க வேண்டுமா?*

*1 கொரிந்தியர் 13:5 - ன் படி,கோபம் என்பது அன்பில்லாத இருதயத்தின் அடையாளம். அன்பு சினமடையாது.*

***செயல்முறை:***
*உங்களுக்கு தெரிந்த கோபக்காரர்கள் மற்றும் அவர்களின் செயல்களைப் பற்றி சிந்தியுங்கள். இதுபோன்ற செயல்களைச் செய்வதைக்குறித்து நீங்கள் எப்படி உணருகிறீர்கள்? கோபத்தையும்/கோபம் கொண்டவர்களையும் தவிர்க்க என்ன முயற்சிகளை எடுக்க திட்டமிட்டுள்ளீர்கள்?*

---

***4. பணரீதியான பொறுப்புகளில் ஞானமாக இருங்கள் நாள் 4***

---

***நீதிமொழிகள் 22:26-27***
***26. கையடித்து உடன்பட்டு, கடனுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாகாதே. 27. செலுத்த உனக்கு ஒன்றுமில்லாதிருந்தால், நீ படுத்திருக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக்கொள்ளவேண்டியதாகுமே.***

*மற்றவர்களின் கடன்களுக்குப் பொறுப்பேற்பது ஆபத்தானது. தனிப்பட்ட கடனைத் தவிர்க்க வேண்டும், எனவே மற்றொரு நபரின் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பதை தவிர்க்க வேண்டும்.*

*ஒவ்வொரு மனிதனும் தனக்கும் தன் குடும்பத்துக்கும் நீதியாக இருக்க வேண்டும்; அப்படி இல்லாதவர்கள் தன் முட்டாள்தனத்தினாலும் அல்லது கவனக்குறைவினாலும், தங்களிடம் உள்ளதை வீணாக்குவார்கள்.*

***செயல்முறை:***
*நீங்கள் பணரீதியான விஷயத்தில் சிரமப்படுகிறீர்கள் என்றால், ஒழுக்கமான மற்றொரு நபரின் ஆலோசனையைப் பெறுங்கள். நீங்கள் ஒழுக்கமாக இருந்தால், பணரீதியான விஷயத்தில் ஒழுக்கமாக இருக்க முடியாது என்று நீங்கள் நினைக்கும் ஒருவருக்கு உதவ முயற்சிக்கவும்.*

---

***5. பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே. நாள் 5***

---

***நீதிமொழிகள் 22:28 - உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே.***

***உபாகமம் 27:17***
*பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.*

*ஒரு மைல்கல் - ஒரு வழக்கம், ஒரு பாரம்பரியம் அல்லது ஒரு மதிப்பு - ஆகியவைகள் எளிதாக அகற்றப்படக்கூடாது.*

*எந்த காரணமும் இல்லாமலும் மற்றும் தவறான காரணத்திற்காக நம் தந்தையர் இத்தகைய அடையாளங்களை அமைத்ததாக நாம் ஒருபோதும் கருதக்கூடாது. பாரம்பரியத்திற்காக பாரம்பரியத்தை பாதுகாக்க கூடாது, ஆனால், பாரம்பரியத்தை அழிக்க வேண்டுமென்பதற்க்காக அழிக்கவும் கூடாது.*

***செயல்முறை:***
*இந்த வசனத்தைப் பற்றி உங்கள் மனதில் என்ன தோன்றுகிறது? அதன் மூலம் ஜெபம் செய்யுங்கள்.*

**6. உங்கள் திறமையை கூர்மைப்படுத்துங்கள் நாள் 6**

***நீதிமொழிகள் 22:29***

*29. தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்.*

*நாம் 3D-அணுகுமுறையைப் பின்பற்றினால் திறமையானவர்களாக இருக்க முடியும்: முடிவு, அர்பணிப்பு , உறுதி. ஒருவர் முதலில் முடிவு செய்ய வேண்டும், பின்னர் அதில் வளர நேரத்தை ஒதுக்கி அர்பணிக்க வேண்டும் அதன் பின்னர் மைல்கற்களை அடைவதற்கு உறுதியுடன் இருக்க வேண்டும்.*

*ஒரு ஆண் அல்லது பெண் தங்கள் பணியில் சிறந்து விளங்குவது அவர்களுக்கு உலகில் சிறந்த நிலையை அளிக்கும். அதைவிட முக்கியமாக, ராஜாக்களின் ராஜாவுக்கு முன்பாக அவர்களை நிற்க வைக்கிறது, அவர் தன்னிடம் விடாமுயற்சியுடன் வேலை செய்பவருக்கு வெகுமதி அளிப்பதாக உறுதியளிக்கிறார்.*

*கொலோசியர் 3:24. எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.*

***செயல்முறை:***

*நன்றாக முடிந்தது என்று தேவன் சொல்வாரா? தேவனை மேலும் மேலும் கவர்வதர்கான சில திட்டங்களை பட்டியலிடுங்கள்.*

**7. நீ போஜனப்பிரியனாயிருந்தால், உன் தொண்டையிலே கத்தியை வை நாள் 7**

***நீதிமொழிகள் 23:1-3***

*1. நீ ஒரு அதிபதியோடே போஜனம்பண்ண உட்கார்ந்தால், உனக்கு முன்பாக இருக்கிறதை நன்றாய்க் கவனித்துப்பார். 2. நீ போஜனப்பிரியனாயிருந்தால், உன் தொண்டையிலே கத்தியை வை. 3. அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே; அவைகள் கள்ளப்போஜனமாமே.*

*உங்கள் தொண்டையில் கத்தியை வை என்றால் உங்களை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே அர்த்தம் . நமக்கு முன்னால் என்ன இருக்கிறது என்பதைக்குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும். மின்னுவதெல்லாம் பொன்னல்ல. குறிப்பாக நம் உணவானது மக்களை தங்கள் கட்டுப்பாட்டை இழக்கச் செய்து, அவர்களை எதிர்பாராத விளைவுகளை எதிர்கொள்ள வைத்துள்ளது.*

***1 பேதுரு 2:3 -** நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்.*

***செயல்முறை:***

*உங்கள் வாழ்க்கையில் எதற்க்காகவாவது ஆசைப்பட்டு அதினால் கட்டுப்பாட்டை இழந்திருக்கிறீர்களா? உங்களைப் பாதுகாத்த தேவனுக்கு நன்றி கூறி கவனமாய் இருங்கள்.*

**8. ஐசுவரியவானாகவேண்டுமென்று பிரயாசப்படாதே நாள் 8**

***நீதிமொழிகள் 23: 4-5***

*4. ஐசுவரியவானாகவேண்டுமென்று பிரயாசப்படாதே; சுயபுத்தியைச் சாராதே. 5. இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப்போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோம்.*

*கடின உழைப்பு ஞானத்தின் அடையாளம் என்றாலும், அந்த உழைப்பில் இருந்து வருகிற செல்வத்திற்காக நாம் வாழ்வதில்லை. நம் வாழ்வின் தகுதிக்கு அந்த ஐஸ்வர்யங்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை மற்றும் தற்காலிகமானவை ஆகும்.*

.

***1 தீமோத்தேயு 6:9-10***
*9. ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். 10. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

***செயல்முறை:***
*நாம் செய்வதை ஏன் செய்கிறோம் என்று நம்முடைய இதயங்களில் ஆராய்ந்து பார்ப்போம்.*

## *9. வன்கண்ணனுடைய ஆகாரத்தைப் புசியாதே* — *நாள் 9*

***நீதிமொழிகள் 23: 6 - 8***
*6. வன்கண்ணனுடைய ஆகாரத்தைப் புசியாதே; அவனுடைய ருசியுள்ள பதார்த்தங்களை இச்சியாதே. 7. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; புசியும், பானம்பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது. 8. நீ புசித்த துணிக்கையை வாந்திபண்ணி, உன் இனிய சொற்களை இழந்துபோவாய்.*

*வசனம் 1-3 - ன்படி ஐஸ்வர்யவான்களின் வாழ்க்கை முறை குறித்து எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. இப்போது உணவு அல்லது செல்வத்திலிருந்து விலகி, உணவை வழங்குபவரின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கு அந்த எச்சரிக்கையானது மாற்றப்பட்டுள்ளது.*

*ஆடம்பரமான வாழ்க்கை முறை மற்றும் வஞ்சகமான விருந்தோம்பல் ஆகிய இரண்டும் தவிர்க்கப்பட வேண்டும். உங்களுடைய மகிழ்ச்சி மற்றும் செழிப்பு தவிர வேறு தீய லட்சியங்களைக் கொண்ட ஒரு தீய நபரின் உணவிற்கான அழைப்பை நீங்கள் நிராகரிக்க வேண்டும்.*

***1 கொரிந்தியர் 5:11****. நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது.*

***செயல்முறை:***
*நம்மை சுற்றியுள்ள மக்களை புரிந்து கொள்ளும் பகுத்தறிவுள்ள இருதயத்திற்காக ஜெபிக்கவும்.*

## *10. மூடனிடம் புத்திசாலித்தனமாக பேச முயற்சிக்காதே* — *நாள் 10*

***நீதிமொழிகள் 23:9***
*மூடனுடைய செவிகள் கேட்கப்பேசாதே; அவன் உன் வார்த்தைகளின் ஞானத்தை அசட்டைபண்ணுவான்.*

*மூடன் உங்களுடைய ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது பாராட்டவோ மாட்டார். இது பன்றிகளுக்கு முன் முத்துக்களை வீசுவது போன்றது. உங்களின் மதிப்புமிக்க எண்ணங்களை யாருடன் பகிர்ந்து கொள்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்.*

*ஒரு மூடன் ஞானமான வார்த்தைகளின் அர்த்தத்திற்குள் நுழைய முடியாது; அவனுக்கு அவைகளின் மீது பசியும் இல்லை, மேலும் அவனது சுயதிருப்தியின் மந்தநிலையில் அவமதிப்பைத் தவிர வேறொன்றையும் உணராதிருப்பான் .*

***செயல்முறை:***
***நீதிமொழிகள்** 22:3, 27:12 - விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்துகொள்ளுகிறான்; பேதைகள் நெடுகப்போய் தண்டிக்கப்படுகிறார்கள். அதிக விவேகத்துடன் இருக்க நாம் செய்ய வேண்டிய சில மாற்றங்கள் என்ன?*

**11. சிறியவர்களின் எல்லைகளைத் தொடாதே** **நாள் 11**

***நீதிமொழிகள் 23:10-11***
*பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே; திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே. அவர்களுடைய மீட்பர் வல்லவர்; அவர் உன்னுடனே அவர்களுக்காக வழக்காடுவார்.*

*விதவைகளைப் போலவே, தேவன் தந்தையற்றவர்களையும், அந்நியர்களையும், ஏழைகளையும் சிறப்புடன் கவனித்துக் கொண்டார். பலவீனமான மற்றும் ஆதரவற்ற இந்த வகையினரைத் தொந்தரவு செய்பவர்கள் மீது பழிவாங்குவதற்காக வானத்திலிருந்து வருவேன் என்று வல்லமையுள்ள தேவன் வாக்குறுதி அளித்திருக்கிறார். இது ஞானமும் தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. அவர்களுக்கு உதவ உங்கள் வசதியை விட்டு வெளியே செல்லுங்கள்.*

*யகோகோபு 1:27 திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.*

***செயல்முறை:***
*தந்தையற்றவர் / விதவையுடன் உணவு உண்ணுங்கள்.*

**12. கற்றுக்கொள்ளவும் வளரவும் எப்போதும் வாய்ப்புகளைத் தேடுங்கள்** **நாள் 12**

***நீதிமொழிகள் 23:12***
*உன் இருதயத்தைப் புத்திமதிக்கும், உன் செவிகளை அறிவின் வார்த்தைகளுக்கும் சாய்ப்பாயாக.*

*மக்களிடையே பெரிய வேறுபாடுகள் உள்ளன. சிலர் வெற்றியாளர்கள்; சிலர் தோற்றவர்கள். சிலர் புத்திசாலிகள்; சிலர் முட்டாள்கள். புத்திசாலித்தனத்தை இழக்கும் அல்லது ஞானத்தைப் பெறும் தேர்வுகளை செய்கிறார்கள். ஒரு உன்னதமான மற்றும் நல்லொழுக்கமுள்ள மனிதன் ஞானத்தைத் தொடர வாழ்க்கையில் மற்ற விஷயங்களைத் தியாகம் செய்வான்.*

*ஞானத்தைத் தேடும் மனிதர் மகிழ்ச்சியான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையைப் பெறுவான், ஏனென்றால் அவர்கள் உலகத்தை சரியாகப் புரிந்துகொள்கிறார்கள், சரியான முடிவுகளை எடுக்கிறார்கள், வலி மற்றும் பிரச்சனைகளைத் தவிர்க்கிறார்கள்.*

*ஒவ்வொரு நாளும் 1,440 நிமிடங்கள் உள்ளன. எத்தனை பேர் ஞானத்தைத் தேடுகிறீர்கள்? நீங்கள் எந்த அளவிற்கு புத்திமதிகளை பின்பற்றுகிறீர்கள்?*

***செயல்முறை:***
*இந்த நீதிமொழியின் அறிவுரையையும் அறிவையும் கேட்ட பிறகு உங்கள் இதயமும் காதுகளும் எவ்வளவு கவனத்துடன் இருக்கின்றன? இன்று நீங்கள் என்ன மாற்றங்களைச் செய்வீர்கள்?*

**13. ஒழுக்கத்தைத் தடுத்து நிறுத்தாதீர்கள்** **நாள் 13**

***நீதிமொழிகள் 23:13-14***
*13 பிள்ளையை தண்டியாமல் விடாதே; அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான்.*
*14 நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே.*

*உலகம் தனக்கு ஒரு சிறந்த யோசனை இருப்பதாகக் கருதுகிறது மற்றும் நம்புகிறது - குழந்தைகள் அவர்கள் விரும்பியதைச் செய்யட்டும், சுதந்திரம் அவர்களை ஒழுக்கமாகவும் புத்திசாலித்தனமாகவும் இருக்கத் தூண்டும்.*

*உங்கள் குடும்பம், சபை மற்றும் தேசத்தின் எதிர்காலம் தேவனால் ஏவப்பட்ட மற்றும் தவறுகள் இல்லாத வார்த்தையினால் உண்டாகும் ஞானமான பயன்பாட்டை சார்ந்துள்ளது. மகிழ்ச்சியாக அதைக் கடைப்பிடிப்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அதை மறுத்து நிராகரிப்பவர்கள் விளைவுகளைச் சந்திப்பார்கள்.*

*எபிரெயர் 12:11*
*11 எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்.*

***செயல்முறை:***
*நீங்கள் பெற்ற அனைத்து ஒழுக்கம் / திருத்தம் ஆகியவற்றை நினைவில் வைத்து, அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.*

### *14. செம்மையானவைகளை பேசுங்கள்* *நாள் 14*

***நீதிமொழிகள் 23:15-16***
*15 என் மகனே, உன் இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால், என்னிலே என் இருதயம் மகிழும். 16 உன் உதடுகள் செம்மையானவைகளைப் பேசினால், என் உள்ளிந்திரியங்கள் மகிழும்.*

*உங்கள் தந்தையையும் தாயையும் மகிழ்ச்சியாக மாற்றுவதற்கான எளிதான வழி ஞானமாக வாழ்வது தான். நீங்கள் புத்திசாலியாக இருக்கும்போது பிசாசையும் இந்தப் பொல்லாத உலகத்தையும் தவிர வேறு எதையும் இழக்கப் போவதில்லை.*

*ஞானம் உங்களை உயர்த்தி, தேவனைப் பிரியப்படுத்துகிறது, பெற்றோரைப் பிரியப்படுத்துகிறது, உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு நன்மையை தருகிறது என்றால், ஞானம் உங்களுக்கு எவ்வளவு முக்கியம்? ஒவ்வொரு நாளும் நீங்கள் நினைக்கும் முதல் மற்றும் கடைசி விஷயமாக இது இருக்க வேண்டும்.*

*அதிக ஞானத்தைப் பெறுவதில் கவனம் செலுத்துவதற்கு நீங்கள் அனைத்து முட்டாள்தனமான மற்றும் வீணான செயல்களை குறைக்க வேண்டும்.*

***செயல்முறை:***
*வாழ்க்கை மிகவும் குறுகியது; இனி வரும் காலங்களில் புத்திசாலியாக இருக்க முயற்சி செய்வீர்களா?*

### *15. கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு* *நாள் 15*

***நீதிமொழிகள் 23:15-16***
*17 உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமை கொள்ள விடாதே; நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. 18 நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.*

*கர்த்தருக்குப் பயப்படுதல் மிகவும் சிறந்தது. ஒவ்வொரு பாவியும், எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும் சரி, பிரபலமாக இருந்தாலும் சரி, இறந்து நரகத்திற்குச் செல்வார்கள். எனவே தேவனுக்கு அஞ்சுவது மனிதனின் முழுக் கடமையாகும்.*

*துன்மார்க்கமான நித்திய துன்பங்களோடு செயலற்ற, நம்பிக்கையற்ற வாழ்க்கையை விட தேவனின் ஆசீர்வாத்துடனும் தயவுடனும், தெளிவின்மை மற்றும் வறுமையோடு வாழ்வது சிறந்தவை.*

*தேவனுக்கு பயப்படுதல் என்பது கூட்டங்களுக்கு வருவது, பிரச்சனைகளுக்காக ஜெபிப்பது, ஞாயிறு ஆராதனை அல்லது திருவிருந்து போன்றவற்றுக்காக மட்டும் இருக்கும் மனநிலை அல்ல - இது உண்மையான கிறிஸ்தவர்கள் நாள் முழுவதும் ஒவ்வொரு நிமிடமும் பின்பற்றும் வாழ்க்கை முறை, கண்ணோட்டம் மற்றும் உலகக் கண்ணோட்டம்.*

***செயல்முறை:***
*சங்கீதம் 73 படித்து தியானியுங்கள்.*

---

***16. உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து*** ***நாள் 16***

---

***நீதிமொழிகள் 23:10-11***
*19. என் மகனே, நீ செவிகொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து. 20. மதுபானப்பிரியரையும் மாம்சப் பெருந்தீனிக்காரரையும் சேராதே. 21. குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும்.*

*வாழ்க்கையில் உன்னதமாகவும், நல்லொழுக்கமாகவும் இருக்க விரும்பும் ஒரு ஞானமுள்ளவர், பெருந்தீனி அல்லது குடிகார நண்பர்களைத் தேர்ந்தெடுக்க மாட்டார். புத்திசாலித்தனமான நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது தனது சொந்த வெற்றிக்கு அவசியம் என்பதை அவர் அறிவார். அவர் எல்லா நேரங்களிலும் ஒழுக்கமான வாழ்க்கையை வாழும் நிதானமான மற்றும் மிதமான இயல்புடைய ஆண்கள்/பெண்களைத் தேடுவார்.*

*தேவபக்தியுள்ள ஆண்கள்/பெண்கள் இப்படிப்பட்ட விபரீதமான அதிகப்படியானவற்றைத் தவிர்க்கிறார்கள், அவர்கள் என்ன ஏளனங்களைச் சகித்துக் கொண்டாலும், அப்படிப்பட்ட பாவங்களுக்கு தேவன் நியாயத்தீர்ப்பு கொண்டுவருவார் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் இப்படிப்பட்ட தீய செல்வாக்கைத் தவிர்ப்பதற்காக இந்த பாவ செயல்களில் ஈடுபடும் எந்தவொரு கூட்டத்தையும் அல்லது நபர்களையும் நிராகரிக்கிறார்கள்.*

***செயல்முறை:***
*அந்த பழக்கங்களோடு போராடுபவர்களுக்காக ஜெபம் செய்து அவர்களுக்கு உதவி செய்ய நாடுங்கள்.*

---

***17. உங்கள் பெற்றோருடைய ஞானத்தையும் ஆலோசனையையும் கவனியுங்கள்*** ***நாள் 17***

---

***நீதிமொழிகள் 23:22-25***
*22. உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே. 23. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு. 24. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். 25. உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள்.*

*மகத்துவமான தேவன் உங்களை உண்டாக்கியபோது, அவர் உங்களையோ உங்கள் பெற்றோரையோ கேட்கவில்லை. தேவனானவர் அனைத்து சூழ்நிலைகள் மற்றும் அவரது செயலின் சாத்தியமான விளைவுகளைப் பற்றிய அவரது முழுமையான அறிவாற்றலின் அடிப்படையில் அவர் உங்கள் மூவருக்கும் அறியாத ஒரு மறைவான தேதியைத் திட்டமிட்டு செயல்படுத்தினார். தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் பெற்றோருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அவர்களை கனப்படுத்துங்கள். அவர்களை அன்பு கூருங்கள்.*

*நீங்கள் ஒரு பெற்றோராக இருந்தால், உங்கள் பிள்ளைகள் உங்களிடம் இந்த மரியாதை அல்லது அக்கறையை சிறிதளவும் அல்லது எதையும் காட்டவில்லை என்றால், அன்பான பெற்றோரின் மதிப்பிற்குரிய பொறுப்பை இழப்பதற்கு எது காரணம் என்பதை உணர்ந்து பரலோகத்தின் தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி, உங்கள் பாவச் செயல்களை, கவனக்குறைவான முரண்பாடுகளை, உங்கள் பொறுப்பற்ற செயல்களை மாற்றியமைக்க, அதிகப்படியான விமர்சனத்தை பெறவும் அல்லது அதை அனுமதிக்கும் சூழல் என்ன என்பதையும் ஒப்புக்கொள்ளுங்கள்.*

***செயல்முறை:***
*உங்கள் பெற்றோரை மகிழ்விக்க ஏதாவது செய்யுங்கள். பெற்றோர் இல்லையென்றால், சில வயதானவர்களை மகிழ்விக்க ஏதாவது செய்யுங்கள்.*

***18. உங்களுடைய காயப்படுத்தக்கூடிய மற்றும் எளிதில் பாதிக்கக்கூடியவற்றை குறித்து எச்சரிக்கையாக இருங்கள்*** ***நாள் 18***

***நீதிமொழிகள் 23:26-28***
*26. என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக. 27. வேசி ஆழமான படுகுழி; பரஸ்திரீ இடுக்கமான கிணறு. 28. அவள் கொள்ளைக்காரனைப்போல பதிவிருந்து, மனுஷருக்குள்ளே பாதகரைப் பெருகப்பண்ணுகிறாள்.*

*ஆண்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் எது என்றால் வேசித்தனம் செய்பவர்கள் மற்றும் விபச்சாரிகள். ஒரு கவர்ச்சியான, தைரியமான மற்றும் ஒழுக்கக்கேடான பெண் அவர்களின் மிகவும் ஆபத்தான எதிரி.*

*இளைஞனே, தளர்வாக பேசும் பெண்களுடன் சகவாசம் அல்லது தொடர்பைத் தவிர்க்கவும். அவர்களின் முன்னேற்றங்களை நிராகரிக்கவும். அவர்கள் பொய்யர்கள். அவர்கள் கொடுக்கும் மிகக் குறுகிய இன்பம் இப்பொழுதும் மறுமையிலும் வரவிருக்கும் நீண்ட துன்பத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றுமில்லை. அவை ஆழமான பள்ளம் மற்றும் குறுகிய பள்ளம். கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு பெண்ணை நீ மணந்து, அவளையும் அவளால் வரும் குழந்தைகளையும் அனுபவித்து மகிழ வேண்டும். திருமணமானவர்களும் இதுபோன்ற விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும்.*

***செயல்முறை:***
*இப்படிப்பட்ட காரியங்களில் உங்களுக்கு என்னென்ன சோதனைகள் உள்ளன? உங்களை விடுவிக்க தேவனிடம் கேளுங்கள்*

***19. உங்கள் பழக்கவழக்கங்களில் கவனமாக இருங்கள்*** ***நாள் 19***

***நீதிமொழிகள் 23:29-35***
*29. ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? 30. மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. 31. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். 32. முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். 33. உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். 34. நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். 35. என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள், எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்.*

- *ஐயோ என்பது தொல்லை, குடிப்பழக்கம் பல விதத்தில் எல்லா வகையான பிரச்சனைகளையும் கொண்டுவருகிறது.*
- *துக்கம் என்பது துயரம், துன்பம் மற்றும் வருத்தம், அதிகப்படியான மது இவற்றையெல்லாம் கொண்டுவரும்.*
- *சச்சரவு / சர்ச்சைகள் சண்டைகள் மற்றும் வாக்குவாதங்கள், மேலும் அதிகமாக குடிப்பது இவ்விரண்டையும் ஏற்படுத்தும்.*
- *வாய்விட்டு பேசுதல் / புகார்கள் பேசுவது அர்த்தமில்லாத வகையில் மாற்றப்பட்ட பேச்சு, இவற்றையெல்லாம் குடிப்பழக்கம் அதையும் கொண்டுவரும்.*

***செயல்முறை:***
*உங்களுக்குப் பிடித்த சில பாடல்களைப் பாடுங்கள்.*

**20. பொல்லாத மனுஷரோடு இருக்க விரும்பாதே** **நாள் 20**

*நீதிமொழிகள் 24:1-2*

*1. பொல்லாத மனுஷர்மேல் பொறாமைகொள்ளாதே; அவர்களோடே இருக்கவும் விரும்பாதே. 2. அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும், அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும்.*

பொல்லாத மனிதர்களுக்கு எதிரான பொறாமை என்பது பாவத்தில் அவர்களின் இன்பத்தையும் செழிப்பையும் விரும்புவதும் கெஞ்சுவதும் ஆகும். பரிசுத்தமான வாழ்க்கை என்பது மிகவும் கண்டிப்பானது என்று அது நினைக்கத்தோன்றுகிறது. பொல்லாதவர்களுடன் இருக்கவும், அவர்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளவும் ஆசைப்படுவதும் இதில் அடங்கும். ஆனால் அத்தகைய எண்ணங்கள் அவர்களின் வெற்று வாழ்க்கையின் சீரழிவையும், அதுமட்டுமின்றி நீதிமான்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் மற்றும் துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள் என்பதையும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பையும் மறந்துவிடுகின்றன..

உலகம் வக்கிரமானது மற்றும் மோசமாகி வருகிறது. சமுதாயம் பல தலைமுறைகளாக உபயோகமான நல்ல நடத்தைக்குரிய சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை. ஏன் அவர்களைக்குறித்து நாம் பொறாமைகொள்ளவேண்டும்?

**செயல்முறை:**

தேவனுடைய தரத்தத்திற்கு எதிரான உலகின் சில வடிவங்கள் யாவை? நம் குடும்பம், நண்பர்களுடைய பாதுகாப்பிற்காக வேண்டிக்கொள்ளுங்கள்....

**21. உங்கள் வீட்டை நிலை நிறுத்த ஞானத்தையும் விவேகத்தையும் உபயோகப்படுத்துங்கள்** **நாள் 21**

*நீதிமொழிகள் 24 : 3-4*

*3. வீடு ஞானத்தினாலே கட்டப்பட்டு, விவேகத்தினாலே நிலைநிறுத்தப்படும். 4 அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும்.*

ஒரு வளமான மற்றும் நீண்டநாள் நிலைத்திருக்கக்கூடிய குடும்பமானது ஞானம், புரிதல் மற்றும் அறிவினாலே கட்டப்படும. அதில் குறுக்கு வழி கிடையாது. அதில் மாற்று வழி கிடையாது. நீதியான மனிதன் இந்த உலகத்தில் ஒரு ஆத்மீகமான, வளமான குடும்பத்தை விட்டுச் செல்ல விரும்புகிறார்.

தேவனுடைய ஞானம், தேவனுடைய புரிதல் மற்றும் தேவனுடைய அறிவின் ஆசிர்வாதத்தினாலே கட்டப்படக்கூடிய வீடு ஆத்மீக அர்த்தத்திலும் பொருளாதார அர்த்தத்திலும் வளமான சுகமான செல்வங்களை கொண்டு சேர்க்கும். தேவனுடைய ஆசீர்வாதம் அவருடைய ஞானத்தை தேடி அதை மதிக்க கூடிய வீட்டின் மேல் இருக்கிறது.

**செயல்முறை:**

இந்த வசனங்களை தியானித்து குடும்பமாக ஒரு கலந்துரையாடல் செய்யுங்கள்.

**22. நம்பிக்கைக்கு பாத்திரமான மக்களை கண்டுபிடிக்க நேரத்தை முதலீடு செய்யுங்கள்** **நாள் 22**

*நீதிமொழிகள் 24 : 5 - 6*

*5 ஞானமுள்ளவன் பெலமுள்ளவன்: அறிவுள்ளவன் தன் வல்லமையை அதிகரிக்கப்பண்ணுகிறான்.*
*6 நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும்.*

இங்கு இருக்கக்கூடிய பெலன் என்னவென்றால் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் நல்லதை தெரிந்து கொள்ளவும் செய்யவும் திறன் படைப்பது மற்றும் தவறை உணர்ந்து எதிர்க்கக் கூடிய திறன் கொண்டிருப்பது. ஞானம் மனிதனுக்கு இந்த பலத்தை தருகிறது. புத்திசாலியான மனிதன் வலுவாக இருக்கிறார். அறிவுள்ள மனிதன் பலத்தை பெறுகிறான்.

*ஒரு புத்திசாலியான மனிதன் முடிவுகளை எடுப்பதற்கு முன் விஷயங்களை கவனமாக கருத்தில் கொள்ள தெரிந்திருக்கிறான். அநேக புத்திசாலிகள் மற்றும் அவர்களுடைய ஞானமான அறிவுரைகள் கடுமையான சிக்கலில் இருந்து தன்னை காப்பாற்ற முடியும் என்பது அவருக்கு தெரியும்.*

***<u>செயல்முறை:</u>***
*ஆலோசகர்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள் மற்றும் உங்களுக்கு உதவியதற்காக அவர்களுக்கும் நன்றி செலுத்துங்கள்.*

## *23. மூடனுக்கு ஞானம் எட்டாத உயரம்* *நாள் 23*

***<u>நீதிமொழிகள்</u>*** *<u>24 : 7</u>*
*மூடனுக்கு ஞானம் எட்டாத உயரமாயிருக்கும் அவன் நியாயஸ்தலத்தில் தன் வாயைத் திறவான்.*

*ஞானம் என்பது ஒரு அற்புதமான விஷயம், ஒவ்வொரு மனிதனும் அதை பின் தொடர வேண்டும். ஞானம் மிகவும் விலையேறப்பெற்ற நகையைப் போன்று இருக்கிறது. மற்றும் பூமிக்குரிய எல்லா உடைமைகளைக் காட்டிலும் அதிகமாக தேடப்படவும் மதிப்பிடப்படவும் வேண்டியதாய் இருக்கிறது.*
*ஞானத்திற்கு தாழ்மை தேவை - நீங்கள் தவறு என்று உங்களை அடிபணிய. அதற்கு சீர்படுத்துதல் தேவைப்படுகிறது - மற்றவர்களால் கற்றுக் கொடுக்கப்பட. அதற்கு தைரியம் தேவைப்படுகிறது - பொதுவான மாயைகளுக்கு அப்பாற்பட்டு சிந்திக்க.*

*மூடனால் இந்த காரியங்களை செய்ய முடியாது. அவர்களுக்கு இருதயம் கிடையாது, அவர்களுடைய கண்களும் மற்றும் யோசனைகளும் எல்லா இடங்களிலும் அலைந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய சொந்த எண்ணங்களின் மீது பிரியப்படுகிறார்கள்.*

***<u>செயல்முறை:</u>***
*நீங்கள் போராடக்கூடிய உங்கள் பலவீனங்களுக்காக ஜெபியுங்கள்.*

## *24. துஷ்டனாகவோ பரியாசக்காரனாகவோ இருக்காதீர்கள்* *நாள் 24*

***<u>நீதிமொழிகள்</u>*** *<u>24 : 8-9</u>*
***8*** *தீவினைசெய்ய உபாயஞ்செய்கிறவன் துஷ்டன் எனப்படுவான்.* ***9*** *தீயநோக்கம் பாவமாம்; பரியாசக்காரன் மனுஷருக்கு அருவருப்பானவன்.*

*ஒரு அபாயகரமான மனிதரை உங்களால் பார்க்க முடிகிறதா? தீமையை கற்பனை செய்வது என்பது இருதயத்திலும் மனதிலும் தீவிரமாக பாவத்தை திட்டமிடுவதா ம் . ஒருமுறை கண்டுபிடிக்கப்பட்டால், அப்படிப்பட்ட நபர் மிக கவனமாக தவிர்க்கப்பட வேண்டும், ஏனென்றால் அவர் விஷம் நிறைந்த அபாயகரமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நபர்.*

*மூடத்தனமான எண்ணங்கள் தேவனுடைய பார்வைக்கு முன்பாக பாவமாக இருக்கிறது. பரிகாசக்காரன் சிச்சையையும் போதிப்பவரையும் வெறுக்கிறான். நிறைய சண்டை சச்சரவுகளை ஏற்படுத்துவதால் நல்ல மனிதர்களால் வெறுக்கப்படுகிறான்.*

***<u>செயல்முறை:</u>***
*அப்படிப்பட்ட ஆபத்தான மக்களை உங்களுக்கு தெரியுமா? தயவுசெய்து அவர்களுக்காக ஜெபியுங்கள்.*

**25. மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் நாள் 25**

***நீதிமொழிகள்*** *24 : 10 - 12*
***10*** *ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது.* ***11*** *மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப்போகிறவர்களையும் விடுவிக்கக்கூடுமானால் விடுவி.*
***12*** *அதை அறியோம் என்பாயாகில் இருதயங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத்தக்கதாகப் பலனளியாரோ ?*

*துன்பப்படுவதற்கான நாளும் கஷ்டத்திற்கான நேரமும் எல்லோருக்கும் வரும். அதிக ஆத்மீகமான நபரும் மற்றும் அதிக தீமை செய்யக்கூடிய நபரும் தங்களுடைய சொந்த துன்பங்களை அனுபவிப்பார்கள், அவர்கள் மயங்குகிறார்களா இல்லையா அல்லது தடுமாறுகிறார்களா இல்லையா என்பதை கண்டறிவதாக அந்த சோதனை இருக்கிறது.*

*தேவன் மூடனை தன்னுடைய முட்டாள்தனத்திற்கு பதில் சொல்ல வைப்பார், ஆனால் அலட்சியமாக உள்ள ஒருவர் தன்னுடைய அக்கறையின்மைக்கு பதிலளிக்க செய்வார். தேவன் அவன் அவனுடைய செய்கைக்கு தக்கதாக பலன் அளிப்பார்.*

***செயல்முறை:***
*உங்கள் வாழ்க்கையின் சவால்கள் நிறைந்த நேரங்களை நினைத்துப் பார்த்து தேவன் உங்களை அதிலிருந்து விடுவித்ததற்காக நன்றி சொல்லுங்கள்.*

**26. ஞானம் உங்களுடைய வாழ்க்கைக்கு தேனை போல் இருக்கிறது நாள் 26**

***நீதிமொழிகள்*** *24 : 13 - 14*
***13*** *என் மகனே, தேனைச் சாப்பிடு, அது நல்லது: கூட்டிலிருந்து ஒழுகும் தேன் உன் வாய்க்கு இன்பமாயிருக்கும்.* ***14*** *அப்படியே ஞானத்தை அறிந்து கொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்: அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது.*

*பசியில் இருக்கிற மனிதனை உயிர்ப்பிக்க தேன் நல்லதாக இருக்கிறது. தேனை சாப்பிடுவது அதிகப்படியான இனிப்பு சுவையை சாப்பிடும் சந்தோஷத்தை கொடுக்கிறது. ஞானத்தை சம்பாதிப்பது என்பது அதிகப்படியான சக்தியையும் மகிழ்ச்சியையும் அதன் பின்பாக செழிப்பையும் தருகிறது.*

*ஞானம் நம்முடைய ஆத்மாவிற்கு இன்பமும் மற்றும் லாபமுமாய் இருக்கிறது, எப்படி தேன் நம்முடைய உடலுக்கு இன்பமும் நன்மையுமாய் இருப்பதைப்போல. தன்னை கை கொண்டு அதன்படி நடப்பவர்களுக்கு ஞானம் அநேக வெகுமதிகளை வைத்திருக்கிறது. ஆனால் ஞானத்தை வெறும் கவனித்து, பார்த்து, கேட்பவர்களுக்கு கிடையாது.*

***செயல்முறை:***
*உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அனுபவித்த ஐந்து தேன் போன்ற வசனங்களை எழுதுக.*

**27. நல்லவர்களை தாக்கும் கொடூரமான நபராக இருக்காதீர்கள் நாள் 27**

***நீதிமொழிகள்*** *24 : 15 - 16*
***15*** *துஷ்டனே, நீ நீதிமானுடைய வாசஸ்தலத்துக்கு விரோதமாய்ப் பதிவிராதே: அவன் தங்கும் இடத்தைப் பாழாக்கிப்போடாதே.* ***16*** *நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்: துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்.*

*துன்மார்க்கமான மனிதனே, எச்சரிக்கையா இரு, நீதிமானுக்கு எதிராக சதி செய்து அவனுடைய அமைதியை தொந்தரவு செய்யாதே. ஏனெனில் தேவன் உன்னை தண்டிப்பார்.*

*நீதிமானோ ஆறுதல் அடைவான்! தேவன் உன் பட்சத்தில் இருந்து உனக்கு எதிரான தீங்குகளை கவனிக்கிறார். நீ விழுவாய், ஆனாலும் தேவன் உன்னை மறுபடியும் தூக்கி விடுவார்.*

*தேவன் நல்ல மனிதனுக்கு ரோஜா பூ படுக்கையை வாக்குறுதியாக கொடுக்கவில்லை. உண்மை என்னவென்றால், நல்ல மனிதர்களை சரியாக மாற்ற, கர்த்தர் அவருடைய வாழ்க்கையிலே அடிக்கடி துன்பங்களை கொண்டு வருகிறார். இருந்தாலும் நியாயமான மனிதனுடைய வாழ்க்கையில் இன்னல்கள் உண்டு, கர்த்தர் அவை எல்லாவற்றிலும் இருந்து அவனை விடுவிக்கிறார்.*

***<u>செயல்முறை:</u>***
*தேவனுக்கு பயப்படக்கூடிய ஒரு நபருடன் நேரம் செலவளியுங்கள். அவர்களுடைய ஆத்மீக பயணத்தையும் அவர்கள் சந்தித்த சவால்களையும் குறித்து கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.*

### *28. உன் சத்துரு விழும்போது களிகூறாதே* — *நாள் 28*

***<u>நீதிமொழிகள் 24 : 17 - 18</u>***
*17 உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே: அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக.*
*18 கர்த்தர் அதைக் காண்பார், அது அவர் பார்வைக்கு பொல்லாப்பாயிருக்கும். அப்பொழுது அவனிடத்தினின்று அவர் தமது கோபத்தை நீக்கி விடுவார்.*

*இதோ குணாதிசயத்திற்கான கடினமான சோதனை, இதோ நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதற்கான ஒரு வலுவான ஆதாரம், இதோ ஆத்மீகம் மற்றும் ஞானத்திற்கான உண்மையான அளவு, இதோ உங்களுடைய விசுவாசத்திற்கான ஒரு சவால் இது உங்களுக்கு வேண்டுமோ இல்லையோ. இப்போது யோசித்துப் பாருங்கள், உங்களுடைய எதிராளிகளுக்கு கெட்டது நடக்கும் பொழுது நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா?*

*உங்கள் எதிராளிகளை எப்படி நடத்துகிறீர்கள் என்பதை தேவன் பார்க்கின்றார். அவர்களுக்கு கெட்டது நடக்கும் பொழுது அதைக் குறித்து நீங்கள் சந்தோஷப்பட்டீர்களேயானால், அவர் அவர்களுக்கு உதவி செய்வார் ஒருவேளை உங்களை தண்டிப்பார், தேவன் தன்னுடைய பிள்ளைகளின் எதிரிகளை தண்டிப்பதன் மூலம் அவர்களை பாதுகாக்கின்றார், ஆனால் அதைக் குறித்து நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதை அவர் பார்க்கும் பொழுது அந்த தண்டனையை முடித்து விடுகிறார்.*

***<u>செயல்முறை:</u>***
*உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நினைக்கக்கூடிய கடினமான மக்களுக்காக ஜெபியுங்கள்.*

### *29. தீமையான மக்கள் உங்களை குறித்து கவலை கொள்ளட்டும்* — *நாள் 29*

***<u>நீதிமொழிகள் 24 : 19 - 20</u>***
***19 பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலாகாதே: துன்மார்க்கர்மேல் பொறாமை கொள்ளாதே.***
***20 துன்மார்க்கனுக்கு நல்முடிவு இல்லை; துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்துபோம்.***

*துன்மார்க்கனுடைய கவர்ச்சியான வாழ்க்கை உங்களை தொந்தரவு படுத்த வேண்டாம். பாவிகள் செழிப்பானவர்கள் போல தோற்றமளிப்பார்கள், அவர்கள் சந்தோஷமாக காணப்படுவார்கள், பாவத்திலிருந்து வெளியே வந்துவிடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள், ஆனால் அவர்களின் முடிவு வந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய தற்காலிக வெற்றியை பார்த்து பொறாமை படாதீர்கள்.*

*சங்கீதம் 37:7 கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு, காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.*

***<u>செயல்முறை:</u>***
*சங்கீத 37 தியானித்து அவைகளை நடைமுறைப்படுத்துங்கள்.*

***<u>நீதிமொழிகள்</u>*** *<u>24 : 21 - 22</u>*

***21*** *என் மகனே, நீ கர்த்தருக்கும் ராஜாவுக்கும் பயந்து நட: கலகக்காரரோடு கலவாதே.*

***22*** *சடிதியில் அவர்களுடைய ஆபத்து எழும்பும்: அவர்கள் இருவரின் சங்காரத்தையும் அறிந்தவன் யார்?*

*தேவனுக்கும் தேசத்தின் அதிகாரிகளுக்கும் நாம் பயப்பட வேண்டும் என்பது தேவனுடைய கட்டளையாக இருக்கிறது. அவர்கள் ஒன்றாக பிணைக்கப்பட்டு இருக்கிறார்கள், ஏனென்றால் தேசத்தின் தலைவர்களுக்கு தேவன் அதிகாரத்தை கொடுத்திருக்கிறார்.*

***1*** *பேதுரு* ***2:13 -14*** *நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்.*

***<u>செயல்முறை:</u>***

*அரசாங்கத்திற்காக ஜெபியுங்கள்.* ***1*** *தீமோத்தேயு* ***2:1-2*** *நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.*